## கல்நேவ பிரதேச சபை – 2023

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கல்நேவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 உள்ளவாறான கல்நேவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமைகளை பிரதிபலிக்கின்றது என்பது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா.18,139,024 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா.6,683,088 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலங்கள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்படட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்படட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரியும் வரியும் | 3,160,900 | 3,076,925 | 3,224,325 | 1,218,700 | 2,713,750 | 1,251,800 | 1,134,500 | 1,366,100 |
| (ii) | வாடகை | 11,847,400 | 8,633,754 | 8,038,900 | 5,712,071 | 13,983,850 | 6,895,250 | 6,586,531 | 5,117,217 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 1,472,600 | 1,392,525 | 1,395,625 | 173,825 | 1,539,050 | 271,000 | 282,000 | 176,925 |
| (iv) | ஏனைய வருமானம் | 43,220,596 | 32,690,691 | 24,834,927 | 21,339,331 | 8,826,520 | 27,045,936 | 27,121,520 | 13,483,567 |
| | மொத்தம் | 59,701,496 | 45,793,895 | 37,493,777 | 28,443,927 | 27,063,170 | 35,463,986 | 35,124,551 | 20,143,809 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ் வருமாறு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிலுவை கழிவகற்றல் வரி ரூபா.984,650 அறவிடப்படவேண்டியுள்ளது, இவை அறவிடப்பட்டிருக்கவில்லை, இவற்றுள் 35 சதவீதமான ரூபா.351,850 ஆனது 02 வருடங்களுக்கு மேற்பட்டவை. | முதலாம் காலாண்டில் நிலுவையாக உள்ள கழிவகற்றல் வரிகளில் ரூபா.189,200 அறவிடப்பட்டுள்ளது. | நிலுவையாக உள்ள கழிவகற்றல் வரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை பிரதேச சபைக்கு சொந்தமான 51 கடை அறைகளுக்கான வாடகை ரூபா.3,115,300 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக உள்ள வரிகளில் ரூபா.1,999,250 தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மிகுதியாகவுள்ள தொகை அறவிடப்படவுள்ளது | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | 06 சொத்துக்களுக்கான வியாபார உரிமைகள் குத்தகைக்கு விடப்பட்டிருந்த நிலுவை வாடகை ரூபா.1,000,637 அறவிப்பட்டிருக்கவில்லை மேலும் அவற்றுள் ரூபா.176,534 02 வருடங்களுக்கு மேலாகவும் ரூபா.1,200,000 01 வருடங்களுக்கு மேலாகவும் அறவிடப்படாதுள்ளது. | இவ்விடயடம் தொடர்பான வழக்கின் பிரகாரம் குத்தகை தாரர்கள் நீதிமன்றத்தில் செலுத்தும் தொகையானது காசோலை மூலமாக நீதிமன்றத்தினால் சபைக்கு அனுப்பிவைக்கப்படும் | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iii) | 2023 ஆண்டில் கல்நாவ வாரந்த சந்தை தொடர்பாக சபையினால் முறையான ஆய்வு மற்றும் கண்காணிப்பு மேற்கொள்ளாமையினால் சபைக்கு ரூபா.208,000 வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் வாராந்த சந்தை தொடர்பான கட்டணத்தினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | வாராந்த சந்தை தொடர்பாக சபையினால் முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கட்டணத்தினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை வியாபார அனுமதிப்பத்திரக்கட்டணம் ரூபா.173,825 மற்றும் வர்த்தக வரிகள், தொழிற் துறை வரிகள் ரூபா.114,300 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | நிலுவையாக உள்ள கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை சபையினால் பராமரிக்கப்பட்டு வருகின்ற 05 குடிநீர் செயற்திட்டத்தின் தொடர்பாக நிலுவையாகவுள்ள ரூபா.1,995,062 அறவிடப் பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | நிலுவையாக உள்ள கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2023 திசெம்பர் 31 இல் மாகாணசபையின் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தான நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.18,127,135 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா.663,600 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் செயற்றிறன்**

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப்பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் காணப்படுகின்ற 30 முக்கிய விடயங்களை நிறைவேற்றுவதற்கான உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் 2023 திசெம்பர் 31 வரை அவ்விதமான உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | அவ்விதமான உப விதிகள் உருவாக்கப்படவுள்ளது. | உப விதிகள் உருவாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைக்கு 03 இறைச்சிக் கடைகள் காணப்பட்ட போதிலும் முறையான அறுவை நிலையங்களை கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படிருக்கவில்லை. | அறுவை நிலையங்களை கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது | அறுவை நிலையங்களை கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் |